ஸ்ரீ கணபதி மார்ட் தரம். தலைமுறைக்கும்...

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 16 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, ஜூலை 16 - 22, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- | ஆண்டு சந்தா - ரூ.260/-



ஸ்ரீ கணபதி மார்ட் தரம். தலைமுறைக்கும்...



# நீலாம்பூரில் 1 ஏக்கர் பரப்பளவில்

## மிக பிரம்மாண்டமான ஜவுளிகளின் ஷாப்பிங் உலகம்

புத்தம் புது கலெக்ஷன்களுக்கு
ஆடி தள்ளுபடி

ஸ்ரீ கணபதி மார்ட்-ன்

ஆடி Magical Sale
10% - 50%



**Sarees**

Synthetic Sarees
2 pcs ₹550
2 pcs ₹600
2 pcs ₹650
2 pcs ₹700
2 pcs ₹750

Cotton Brasso
2 pcs ₹999

Pure Silk Sarees
10% - 50%

Aadi Magical
Sarees
₹199

**Gents Readymade**

4 Shirt (Formal) - ₹1000
3 Shirt (Formal) - ₹999
2 Shirt (Formal) - ₹999
2 Shirt (Formal) - ₹899

Aadi Magical
Branded Pant ₹699
Branded T-Shirt
₹499 & ₹699

**Boys Readymade**

Shirt 4 pcs - ₹1000
Pant 2 pcs - ₹1000
T - Shirt 5 pcs - ₹499
3/4 Pant 5 pcs - ₹499

Aadi Magical
Boys Nikker ₹100

**Girls Readymade**

Top (Crush Top) 3 pcs - ₹333
T-Shirt 3 pcs - ₹299
Skirt 2 pcs - ₹499
(3/4) Capri 3 pcs - ₹299
Cotton Frock 2 pcs - ₹499
Leggings 3 pcs - ₹499
Leggings 2 pcs - ₹499

Aadi Magical
Girls T- Shirt ₹100

**Teenage Readymade**

Kurthies + Leggings
Kurthies 3 pcs - ₹999
Dress Material 2 pcs - ₹999
Ladies Leggings 2 pcs - ₹499
Ladies Long Skirt 2 pcs - ₹499
Fancy Chudithar - 25% - 50%

Aadi Magical
Buy Thanviya Tops
Get Leggings Free

**கைத்தறி**

மெத்தை விரிப்பு 2 pcs - ₹500
லுங்கி 2 pcs - ₹250
டவல் 2 pcs - ₹100
ஃபேன்ஸி குஷன்ஸ் 2 pcs - ₹130

Aadi Magical
வேஷ்டி ₹195

**Ladies Inner**

Ladies Nighty 2 pcs - ₹600
Ladies Inskirt 2 pcs - ₹200
Ladies Night Suit - ₹499
Fancy Blouse Bit 2 pcs - ₹200

Aadi Magical
Nighties ₹199

T&C Apply*

**6 METERS**
PURCHASE OF SHIRTING & SUITING
YOU GET FREE STITCHING

JULY 1 TO AUGUST 15

GM
ஸ்ரீ கணபதி மார்ட்
தரம். தலைமுறைக்கும்...

குழந்தைகள் விளையாட்டு பூங்கா மற்றும்
விசாலமான கார் பார்கிங் வசதியுடன்

இளைப்பாற கூல் டிரிங்க்ஸ்
& ஐஸ் கிரீம்

#145, 1B1, NPS Nagar, Neelambur, Coimbatore - 62
73973 99911 / 97912 22220
sriganapathymart2009@gmail.com
sriganapathymart

Our Location
Scan Here

## 2024 மக்களவைத் தேர்தல்:

# கோவையில் களம் காணப்போவது யார்?

✍ சாணக்கியன், தி கோவை மெயில்




எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் களம் இறங்க வி.ஐ.பி.கள் தயாராகி வருவதால் கோவை ஸ்டார் தொகுதியாக மாறக் காத்திருக்கிறது.

இத்தேர்தலில் எப்படியும் புதுவை உள்பட 40க்கு 40 தொகுதிகளையும் வென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் காய் நகர்த்தி வருகிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். கடந்த முறை கோட்டை விட்டதுபோல இந்த முறை இருந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் குறைந்தபட்சம் தங்களுக்கு பலமான கொங்கு மண்டலத்திலாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற வேட்கையில் அதிமுகவும் கங்கணம் கட்டிக்கொண்டு களம் இறங்கியுள்ளது.

அதே கொங்கு மண்டலத்தில் தங்களுக்கும் வலுவான ஆதரவு இருப்பதாகக் கருதுவதால் கொங்கு மண்டலத்தில் இருந்து இந்த முறை வெற்றிக்கணக்கைத் தொடங்கிவிட வேண்டும் என்று காய்நகர்த்தி வருகிறது பாஜக, திமுக, அதிமுக, பாஜக என மூன்று கட்சிகளுமே அதிகம் குறிவைக்கும் தொகுதி கோவை மக்களவைத் தொகுதிதான்.

கோயமுத்தூர் மக்களவைத் தொகுதியைப் பொருத்தவரை தமிழ்நாட்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தொகுதியாகும். சென்னை, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு இணையாக அசுர வளர்ச்சி அடைந்துவரும் ஒரு மாநகரமாகும், கோயமுத்தூர். இதுமட்டுமல்லாமல் தொழில் வளத்தில் முன்னணியில் திகழ்கிறது. இதனிடையே தற்போதைய எம்.பி.யான மார்க்சிஸ்ட் கம்யூனிட்ஸ்ட் கட்சியைச் சேர்ந்த நடராஜன் இதுவரை 2 முறை கோவை தொகுதி மக்களவை உறுப்பினராக இருந்தும் மக்கள் மத்தியில் அவருக்கு பெரிய பரிச்சயம் ஏற்படவில்லை.

குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மற்றொரு எம்.பியான சு.வெங்கடேசனிடம் உள்ள சுறுசுறுப்பில் கால்வாசிகூட இவரிடம் இல்லை. காரணம், அவரது வயது. இதனால்தான் கோவையில் நேரடியாக களமிறங்கும் திட்டத்தில் உள்ள திமுக அதற்கான பூர்வாங்கப் பணிகளை கவனித்து வருகிறது.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியால் திமுக நிர்வாகிகளும், தொண்டர்களும் உற்சாகத்தில் உள்ளனர். ஆனால், அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டுள்ளதால் மாலுமி இல்லாத கப்பல்போல இப்போது கோவை மாவட்ட திமுக பயணிக்கிறது. எல்லா பிரச்னைகளில் இருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு தேர்தல் நேரத்தில் அமைச்சர் செந்தில்பாலாஜி நிச்சயம் வருவார், வெற்றிக்கனியைப் பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கையில் உடன்பிறப்புகள் காத்திருக்கின்றனர்.

இதனிடையே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வரும் மக்களவைத் தேர்தலில் கோவைக்குப் பதில் வேறொரு தொகுதி ஒதுக்கப்படலாம் எனத் தெரிகிறது. திமுக இளைஞரணிச் செயலரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அண்மைக்காலமாக கோவைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலின்போது திமுகவை வெற்றிபெற வைத்தால் மாதாமாதம் கோயமுத்தூருக்கு வருவேன் எனக் கூறியிருந்தார். அடிக்கடி ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக கோவைக்கு விசிட் அடித்து வருகிறார். இதை வைத்து பார்க்கும்போது கோயமுத்தூரில் திமுக களம் இறங்கப்போவது உறுதி என்பது தெளிவாகியுள்ளது.

### திமுக வேட்பாளர் யார்?

கோயமுத்தூரைப் பொருத்தவரை தெற்கு மாவட்டச் செயலர் நா.கார்த்திக், ம.நீ.ம.வில் இருந்து திமுகவுக்கு தாவிய சி.மகேந்திரன் ஆகியோரில் ஒருவருக்குத்தான் இங்கு போட்டியிட அதிக வாய்ப்பு உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. கார்த்திக்கைப் பொருத்தவரை பலத்த அனுபவசாலி. துணை மேயர், சிங்காநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ. என முத்திரை பதித்தவர். எதிர்கட்சியோ, ஆளும்கட்சியோ கட்சிப் பணியை தொய்வின்றி சுறுசுறுப்பாக செய்யக் கூடியவர் எனத் திமுக தொண்டர்களிடம் நற்பெயரைப் பெற்றவர். துணை மேயர், எம்.எல்.ஏ. பொறுப்புகளில் இருந்தபோது மக்களுடன் இறங்கிப் பணியாற்றியதால் பொதுமக்களாலும் நன்கு அறிமுகமானவர். எனவே, இவரே திமுக வேட்பாளராக களம் இறக்கப்படலாம் என்ற பேச்சு எழுந்துள்ளது.

இவரைப் பொருத்தவரை மாநில அரசியலில்தான் அதிக ஆர்வம். இன்னும் மூன்று ஆண்டுகள் பதவி இல்லாமல் இருப்பதைவிட இந்த முறை எம்.பி. ஆவது நல்லது என கார்த்திக்கைச் சுற்றியுள்ள அவரது ஆதரவாளர்கள் உற்சாகப்படுத்தி வருகின்றனர். முதல்வரின் நேரடித் தொடர்பில் இருக்கும் இவர் இத்தொகுதி வேட்பாளாக மாறுவது உறுதி என்கின்றனர் இவரது ஆதரவாளர்கள்.

அதேபோல, கோயமுத்தூரில் கடந்த முறை மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட்ட மகேந்திரன் 1.45 லட்சம் வாக்குகளைப் பெற்றார். இதன்மூலம் இந்தத் தொகுதி முழுவதும் நன்கு அறிமுகமாகியுள்ளார். அவரைக் களம் இறக்கினால், அதிமுகவுக்கு விழும் வாக்குகளையும் கவர்ந்து இழுத்து திமுகவால் வெற்றி பெற முடியும் என்ற அரசியல் கணக்கும் திமுகவிடம் உள்ளது.

### களம் இறங்குகிறாரா கமல்?!

திமுக காங்கிரஸ் கூட்டணியில் சேர ஆர்வமாகக் காத்திருக்கும் நடிகர் கமல்ஹாசன் தலைமையிலான ம.நீ.ம. இத்தொகுதியில் களம் இறங்குவதற்கான ஆயத்தப்பணிகளில் ஈடுபட்டு வருகிறது. கடந்த பேரவைத் தேர்தலில் இத்தொகுதியில் களம் இறங்கி, சுமார் 1,500 வாக்குகள் வித்தியாசத்தில் பாஜகவின் வானதி சீனிவாசனிடம் வெற்றி வாய்ப்பை இழந்தது கமலின் மனதில் ஆறா வடுவாக இப்போதும் இருப்பதாக ம.நீ.ம. நிர்வாகிகள் கூறுகின்றனர்.

எனவே, இந்த முறை இதே தொகுதியில் களம் இறங்கி எப்படியும் வெற்றி பெற்று தனது ஆறாத வடுவுக்கு மருந்து தடவிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் கமல் திட்டம் தீட்டி வருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

அதன் முதல்படியாகத்தான் கோயமுத்தூரின் பெண் ஓட்டுநரான இளம் பெண் சர்மிளா திடீர் பணி நீக்கம் செய்யப்பட்டபோது, அவர் தனியாக வாடகைக் கார் ஓட்டி வருவாய் ஈட்டும் வகையில் கார் பரிசு வழங்கியதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

### அண்ணாமலை போட்டி?!

கோயமுத்தூர் தொகுதியில் பா.ஜ.க. ஏற்கெனவே 2 முறை வெற்றி பெற்றிருப்பதால் இந்தத் தொகுதியில் அண்ணாமலை போட்டியிட பாஜகவும் முயற்சி செய்து வருகிறது. ஆனால், அதிமுக தலைமையை அண்ணாமலை தொடர்ந்து விமர்சனம் செய்து வருவதாலும், பாஜக தலைமையில் தனி அணி உருவாக்கிப் போட்டியிட விரும்புவதாலும் அண்ணாமலை களம் இறங்கினால் அவருக்கு எதிராக அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் தீவிரமாக களப் பணியாற்ற வாய்ப்புள்ளது. எனவே, அண்ணாமலை களம் இறங்குவாரா என்பது கேள்விக்குறிதான்.

இதையெல்லாம் முன்கூட்டியே அறிந்துகொண்டததால்தான் மக்களவை தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என அண்ணாமலை ஏற்கெனவே அறிவித்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்ணாமலை போட்டியிடாதபட்சத்தில் பாஜகவின் மாவட்டத் தலைவரான பாலாஜி உத்தமராமசாமி களம் இறக்கப்படக்கூடும் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. இவர் ஏற்கெனவே கோயமுத்தூரில் பல்வேறு அரசியல் நகர்வுகளை செய்து வருகிறார். ஆயிரக்கணக்கில் தொண்டர்களைத் திரட்டி போராட்டம் நடத்துவது, சுதந்திர தினத்தின்போது 1 லட்சம் தேசியக் கொடியை விநியோகம் செய்தது என கட்சி மேலிடம், மக்கள் கவனம் ஆகியவற்றை ஈர்க்கும் வகையில் அரசியல் நகர்வுகளை செய்து வருகிறார். இவரை களம் இறக்கினால் திமுக மீது இருக்கும் அதிருப்தி வாக்குகள், தங்களுக்கு ஆதரவான பிறமொழியாளர் வாக்குகள், ஹிந்துத்வ வாக்குகள் ஆகியவற்றுடன் எளிதில் வெற்றி பெறலாம் எனக் கணக்கு போட்டு வருகிறது பாஜக.

பாஜக அதிமுக கூட்டணி இல்லையென்றால் இத்தொகுதியில் அதிமுக சார்பில் வடவள்ளி சந்திரசேகர் களம் இறங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்கின்றனர் இரத்தத்தின் இரத்தங்கள். முன்னாள் அமைச்சரும், அதிமுகவின் தலைமை நிலையச் செயலருமான எஸ்.பி.வேலுமணியின் இதயக்கனியாகத் திகழும் சந்திரசேகரை இந்த முறை எப்படியாவது எம்.பி.யாக்கிவிட வேண்டும் என்ற ஆசையில் இரத்தத்தின் இரத்தங்கள் இருக்கலாம் எனத் தெரிகிறது.

### காங்கிரஸ் போட்டியிடுமா?!

கோயமுத்தூரில் 2009 இல் திமுக கூட்டணியிலும், 2014 இல் தனித்தும் போட்டியிட்ட காங்கிரஸ் இத்தொகுதியில் தோல்விதான் அடைந்துள்ளது. இருப்பினும் இத்தொகுதியில் போட்டியிட அகில இந்திய காங்கிரஸ் தேசிய செயலர் மயூரா ஜெயக்குமார், மாநில இளைஞர் காங்கிரஸ் பொதுச்செயலர் ஸ்ரீநிதி வி.பிரேம் உள்ளிட்டோரும் முயற்சியில் உள்ளனர். ஆனால், கோயமுத்தூர் காங்கிரஸுக்கு ஒதுக்கப்படுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறிதான்.

மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்கள் உள்ள நிலையில் இத்தொகுதியில் போட்டியிடுவதற்கான அரசியல் நகர்வுகளை இப்போதே நட்சத்திரத் தலைவர்களும், உள்ளூர் முக்கியப் பிரமுகர்களும் காய் நகர்த்தத் தொடங்கியுள்ளனர். கொங்கு மண்டலத் தலைநகரில் போட்டியிடும் வாய்ப்பு யாருக்கு கிடைக்கும் என்பது ஜனவரிக்கு மேல்தான் ஓரளவு தெரியும்.



அதிமுக பாஜக கூட்டணி உடைந்து பாஜக தலைமையில் ஒரு அணியைக் கட்டமைத்தால் கோயமுத்தூரில் அண்ணாமலை போட்டியிடும் வாய்ப்புள்ளது, அண்ணா திமுகவுடன் கூட்டணி தொடரும் பட்சத்தில் நிச்சயம் அண்ணாமலை போட்டியிடுவதற்கான வாய்ப்பில்லை. பாஜக இந்தத் தொகுதியில் போட்டியிடும் பட்சத்தில் கோயமுத்தூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் வானதி சீனிவாசன் போட்டியிதுவதற்கான விருப்பத்தைத் தெரிவிக்கும் வாய்ப்புள்ளது. காரணம், இவர் தேசிய மகளிர் அணித் தலைவியாகவும் இருப்பதால், எம்.பி. ஆனால் மத்திய அமைச்சராகலாம் எனும் கணக்கில் இருக்கவும் வாய்ப்புள்ளது.

---

# முற்பிறவி நினைவிற்கு வந்தால் என்னாகும்?

✍ தி கோவை மெயில்

கேள்வி : ஒரு ஆறு வயது சிறுவன் தனது முற்பிறவியைப் பற்றி எப்படி நினைவு கூர முடியும்? ஒரு குழந்தை தனது முற்பிறப்பில் யாராக இருந்தான், அவனுடைய பெற்றோர்கள் யார், அவனைக் கொன்றதுயார்,எங்கு எப்போது கொன்றார்கள் என்பதையெல்லாம் சொல்ல முடிந்திருக்கிறது. ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு இது அனைத்தும் அவனுக்கு மறந்துவிட்டது. இது எப்படி சாத்தியமாகும்?

### சத்குரு: அவன் எப்படி நினைவு கூர்ந்தான்?

அவனுக்கு இதெல்லாம் நினைவு இருக்கக்கூடாது. பழைய நினைவுகள் இருக்கக்கூடாது என்றுதான் இந்த வாழ்க்கையை இயற்கை உங்களுக்கு கொடுத்திருக்கிறது. இத்தகைய பாதுகாப்பு சுவரே உங்களுக்கு பழைய நினைவுகள் வரக்கூடாது என்று தான் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நினைவு வருமானால், நீங்கள் இப்போது இருக்கும் நிலையைவிட அதிகமான குழப்பத்தில் சிக்கிக் கொள்வீர்கள். இவ்வுலகில் பத்து, இருபது,முப்பது, அறுபது ஆண்டுகள் வாழ்கிறீர்கள்.

இந்த வருடங்களில் ஏற்பட்ட நினைவுகளே உங்களுக்கு பெரிய போராட்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. உண்மைதானே? இந்த சில ஆண்டு கால நினைவுகளுக்கே இவ்வளவு போராட்டமாக இருக்கிறது என்றால், இன்னும் முற்பிறவி நினைவுகள் வருமானால், உங்களுக்குள் எத்தகைய குழப்பமும் போராட்டமும் நிகழும் என்று உங்களுக்குத் தெரியுமா? இந்தப் பிறவியில் உங்களுக்கு இருக்கும் உறவுகளுடனேயே உங்களுக்குப் பெரும் போராட்டமாக இருக்கிறது. நேற்று நடந்ததையும் மறக்க முடியவில்லை, நாளை என்ன நடக்கப்போகிறதோ என்பதையும் விட முடியவில்லை. இந்தப் போராட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. உங்களுக்கு முற்பிறவி ஞாபகங்கள் வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். இன்று உங்களுடைய அன்பு மகனாக இருப்பவர் முற்பிறவியில் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரின் செல்ல நாய்குட்டியாக இருந்தார் என்று உங்களுக்குத் தெரிய வருகிறது.

இது நிஜம் என்று சொல்லவில்லை, அப்படி வைத்துக் கொள்ளுங்கள் என்று தான் சொல்கிறேன் (சிரிக்கிறார்). எப்படியும் இன்று மனிதரைவிட நாய்களுக்குத் தான் வாழ்க்கை நன்றாக இருக்கிறது. அப்படித்தானே? இது உங்களுக்கும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரருக்கும் எத்தகைய பூதாகாரமான பிரச்சனைகளை உருவாக்கும் என்று தெரியுமா? (சிரிக்கிறார்) அந்த நாயின் வாழ்க்கையிலும் கூட இது சிக்கலை ஏற்படுத்தும். இதனால் யாருக்கும் எவ்வித நல்லதும் நடக்க வாய்ப்பில்லைதானே? அவர் இதற்கு முன்னர் உங்கள் மனைவியாக இருந்திருந்தாலும், தந்தையாக இருந்திருந்தாலும், உயிர் நண்பராகவே இருந்திருந்தாலும் கூட இப்போது அது உங்களுக்கு ஒரு பிரச்சனையாக இருந்திருக்காது என்றால் இதெல்லாம் உங்களுக்குத் தெரிவது ஒன்றும் தவறல்ல.




ஆனால், உங்களுடையது என்று நினைக்கக்கூடிய ஒவ்வொன்றுக்கும் நீங்கள் உணர்ச்சி வயப்படுபவர் என்றால், இது நிச்சயம் பிரச்சனை தான். பொதுவாகவே மக்கள் ‘என்னுடையது’ என்று எதைப்பற்றி நினைக்கிறார்களோ அதனுடன் தான் உணர்ச்சி அளவில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். இப்போது நீங்கள் உங்கள் அப்பாவையோ, அம்மாவையோ அல்லது உடன் பிறந்த இரட்டைச் சகோதரனையோ, சகோதரியையோ பிறப்பில் இருந்தே பார்த்ததில்லை என்று வைத்துக் கொள்வோம்.

இன்று நான் ஒருவரைக் காட்டி, இதோ பாருங்கள், இவர்தான் உங்கள் அம்மா என்று சொல்கிறேன். நீங்கள் அவரை இன்று வரை பார்த்ததில்லை. அவருடன் இன்று வரை உங்களுக்கு எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை. அப்படியிருந்தாலும் கூட, இவர்தான் உங்கள் அம்மா என்று ஒருவர் சொல்லிவிட்டால் போதும், அவரைப் பார்த்தவுடன் உங்களுக்கு அப்படியே உணர்ச்சிகள் வெடித்துக் கிளம்பும். அது எங்கிருந்து வருகிறது? அவருடன் நீங்கள் இதுவரை பழகவில்லை. அவருடன் வாழ்ந்ததில்லை. ஆனால் யாரோ ஒருவர், “இவர்தான் உங்கள் அம்மா” என்று சொன்னவுடன் நீங்கள் உணர்ச்சிவயப்பட்டுப் போகிறீர்கள். அதாவது அவர் உங்களுக்குச் சொந்தம் என்று சொல்லிவிட்டார். அப்படித்தானே? “என்னுடையது” என்று நீங்கள் எப்போது நினைக்கிறீர்களோ, அப்போது அவற்றின் மீது உங்களுக்கு உணர்ச்சிகள் வெடித்துக்கொண்டு வெளிவருகின்றன.

உங்களுக்கு ‘உங்களுடையதாக’ இருந்தால் மட்டும் தான் உணர்வுகளும் ஒட்டுதலும் இருக்க முடியும் என்ற பிரச்சினை இருக்கிறது என்றால், உங்கள் ஆசையை இன்னும் சற்று அதிகமாக்கி, எல்லாவற்றையுமே உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். பேராசை என்று ஆன பிறகு, அதில் கஞ்சத்தனம் எதற்கு? பேராசையை அதன் உச்சத்திற்கே எடுத்துச் சென்று, எல்லோரையுமே உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். அதில் என்ன பிரச்சினை? அதை யாராவது தடுப்பார்களா என்ன? (சிரிக்கிறார்).

ஒன்று எல்லோருமே என்னுடையவர்கள் என்ற உச்சப் பேராசையில் இருங்கள், அல்லது, யாருமே என்னுடையவர்கள் அல்ல என்று விடுங்கள். ஆனால் “இதுதான் என்னுடையது, அது என்னுடையது அல்ல” என்றால் அது நிச்சயம் பிரச்சினைதான்.

Sree Annapoorna
Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# தி கோவை மெயில்

ஸ்ரீ அன்னபூர்ணா
ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

தமிழ் & ஆங்கில வார இதழ்

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 16 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, ஜுலை 16-22, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- | ஆண்டு சந்தா - ரூ.260/-

### திருப்பூர் அவிநாசி சாலையில்

# ஓர் புதிய பிரமாண்டம்
# ஸ்ரீ அன்னபூர்ணா
# இனிதே துவக்கம்



புதிய கிளையை எஸ்.பி.அப்பேரல்ஸ் நிறுவனத் தலைவர் சுந்தரராஜன் துவக்கி வைத்தார்.









(இடமிருந்து) புதிய கிளையின் பூஜையில், மலர் தூவி வணங்கும் ஸ்ரீ அன்னபூர்ணா குழுமத் தலைவர் ராமசாமி. கிளையின் முதல் தளத்தை திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் கே.எம்.சுப்ரமணியன் துவக்கி வைத்தார். இரண்டாம் தளத்தை கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே.பி.ராமசாமி துவக்கி வைத்தார்.

கோயமுத்தூர் நகரின் பெருமைகள் என்று பட்டியலிட்டால், சில்லென்ற காற்று, சிறுவாணி தண்ணீர் என்று தொடங்கி ஸ்ரீ அன்னபூர்ணா காபியில்தான் வந்து முடியும். உள்ளூர்க்காரர்களுக்கு அதிகாலை வாக்கிங், அதன்பிறகு ஸ்ரீ அன்னபூர்ணா காபி என்றுதான் பொழுதே தொடங்கும். வெளியூரிலிருந்து வந்தாலும் விருந்தினர்களை அழைத்துச் செல்லும் இடங்களில் ஒன்றாக ஸ்ரீ அன்னபூர்ணா திகழ்கிறது.

கோயமுத்தூரைப் பொருத்தவரை அன்னபூர்ணா ஓட்டல் என்பது ஒரு பிராண்ட் மட்டும ல்ல. நவீன கோயமுத்தூர் வரலாற்றின் ஒரு பகுதியும் ஆகும். அன்னபூர்ணா ஹோட்டல் தொடங்கி வளர்ந்த கதையே சுவாரஸ்யமானது. அது, சாதாரணமான சிறு தொழிலாகத் தொடங்கி தனது உழைப்பாலும், திறமையாலும் உயர்ந்து, ஒரு உன்னதமான உணவு சாம்ராஜ்யத்தை உருவாக்கிய தாமோதரசாமி நாயுடு என்ற ஒரு தொழில்முனைவோரின் வெற்றிக்கதை என்பது மட்டுமல்ல; சமூகத்தோடு கலந்துரையாடிய ஒரு பெரியவரின் வாழ்க்கையும் அதில் அமைதியாக இணைந்து இருக்கிறது. அவர் உருவாக்கிய தரம் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

தாமோதரசாமி நாயுடு என்ற பெரியவரின் வெற்றிக்கதை என்பது வெறும் வணிக வெற்றி மட்டுமல்ல. அண்ணன் தம்பி உறவு, குடும்பப் பாசம், சமூக ஒற்றுமை என்று பல அம்சங்களைக் கொண்டதாகும். இந்தத் தொழிலில் தகுதி படைத்த தொழிலாளர்கள் தொடர்ந்து நீடிப்பதும் குறைவு. அதை எல்லாம் சமாளித்து வாடிக்கையாளரின் தேவையை நிறைவு செய்வது என்பது எளிதானதல்ல. அவற்றையெல்லாம் கடந்த 55 ஆண்டுகளாக சிறப்பாக செய்து இயங்கி வருகிறது.

அந்த வகையில், இன்று சைவ உணவுப் பிரியர்களின் மனம் கவர்ந்த கோயமுத்தூரின் பெருமையான 'ஸ்ரீ அன்னபூர்ணா' உணவகத்தின் 18 வது கிளை திருப்பூர் அவினாசி பைபாஸ் சாலை அருகே வெள்ளிக்கிழமை துவங்கியது. 12,000 சதுரடி கொண்ட




**தாமோதரசாமி நாயுடு உருவாக்கிய தரம் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. தாமோதரசாமி நாயுடு என்ற பெரியவரின் வெற்றிக்கதை என்பது வெறும் வணிக வெற்றி மட்டுமல்ல. அண்ணன் தம்பி உறவு, குடும்பப் பாசம், சமூக ஒற்றுமை என்று பல அம்சங்களைக் கொண்டதாகும்.**



இந்த புதிய கிளை ஏ.சி. வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. தரைத் தளம் மற்றும் முதல் தளத்தில் டைனிங் ஏரியா உள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 200 பேர் அமர்ந்து உணவு உண்ணலாம்.

மேலும், தரைத்தளத்தில் பிரத்யேக இனிப்பு மற்றும் பலகார விற்பனை மையமும் உள்ளது. இங்கு 160 வகை இனிப்புகளும் 30 வகை கார வகைகளையும் கிடைக்கும். வாடிக்கையாளர்கள் வசதிக்காக ஒரே நேரத்தில் 50 கார்கள் நிறுத்தக்கூடிய இட வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

புதிய கிளையை எஸ்.பி. அப்பேரல்ஸ் நிறுவனத் தலைவர் சுந்தரராஜன் துவக்கி வைத்தார். கிளையின் முதல்தளம் மற்றும் ஹாலை திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் கே.எம்.சுப்ரமணியன், கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே.பி.ராமசாமி ஆகியோர் துவக்கி வைத்தனர்.

கே.இ.சி. கான்ஸ்டிரக்ஷன் நிறுவன உரிமையாளர் கார்த்திகேயன், கிளையின் முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார். அதை, கிரிஸ்டல் கிளோத்திங் நிறுவனத் தலைவர் வெங்கடபதி பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீ அன்னபூர்ணா குழுமத் தலைவர் ராமசாமி, துணைத் தலைவர் சுந்தரராஜன், நிர்வாக இயக்குநர் சீனிவாசன், இணை நிர்வாக இயக்குநர் வெங்கடேஷ் பாபு, தலைமை செயல் அதிகாரி ஜெகன் எஸ்.தாமோதரசாமி, எக்சிகியூட்டிவ் டைரக்டர் விவேக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### காப்பி என்றாலே ஸ்ரீ அன்னபூர்ணா தான்...



திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் சுப்பிரமணியன் கூறுகையில், 'நான் கடந்த 30 ஆண்டுகளாக அன்னபூர்ணா உணவகத்தின் வழக்கமான வாடிக்கையாளர். இத்தகைய உயர்தர உணவகம் திருப்பூர் அருகில் அமைந்ததில் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் மற்றும் மக்களின் சார்பாகவும் மட்டற்ற மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

வெளிநாடுகளிலுருந்து இறக்குமதியாளர்கள், கோயமுத்தூர் விமான நிலையத்தில் இறங்கியவுடன் அன்னபூர்ணாவின் காப்பியை எடுத்துக்கொண்டால்தான் அவர்கள் மனதிற்கு நிறைவு தருகிறது என்பார்கள். எனவே, இதனை பெரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறோம். 30 ஆண்டு காலமாக அதே தனித்துவத்துடன் காப்பி தருவதே அன்னபூர்ணாவின் சிறப்பாகும்' என்று தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

### ஸ்ரீ அன்னபூர்ணாவிற்கு இணையாக எதுவும் இல்லை



தி சென்னை சில்க்ஸின் உரிமையாளர் மாணிக்கம் கூறுகையில், '30 வருடங்களாக அன்னபூர்ணாவின் உரிமையாளர் எனது நண்பர். தற்போது அவிநாசி மக்களுக்கும் அன்னபூர்ணா உணவை சுவைக்க அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது என்பது பெரும் மகிழ்ச்சி. எனது வெளிநாட்டு நண்பர் எத்தகைய ஆடம்பரம், வசதிகள் அமெரிக்காவில் இருந்தாலும் அன்னபூர்ணாவின் காப்பி, டீ, இட்லி சாம்பார், மசால்தோசைக்காக இந்தியாவில் வாழ வேண்டும் என்பார். ஸ்ரீ அன்னபூர்ணாவின் உணவிற்கு இணையாக எதுவும் இல்லை' என்றார்.

### நீண்டநாள் கனவு!



எஸ்.பி. அப்பேரல்ஸ் நிறுவனத் தலைவர் சுந்தரராஜன் கூறுகையில், 'அன்னப்பூர்ணா உரிமையாளர்கள் அவிநாசியில் அருமையான இடத்தைத் தேர்வு செய்துள்ளனர். இங்கு நீண்டகாலமாக அன்னப்பூர்ணாவின் கிளை எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. இது மிக சிறப்பாக இருக்கப் போகிறது. நானும் நிர்வாக இயக்குநர் சீனிவாசனும் இதற்காக பல முயற்சிகளை செய்துள்ளோம். இங்கு அன்னபூர்ணா புதிய கிளை இடம்பெற்றது திருப்பூர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும்' என்றார்.

### சரியான இடத்தில சரியான உணவகம்



தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் அஸோசியேஷன் தலைவர் அப்புக்குட்டி கூறுகையில், 'அவிநாசியில் அழகாக காட்சி தரக்கூடிய அற்புதமான இடத்தை, பயணிகளின் வசத்திற்கு ஏற்பத் தேர்வு செய்துள்ளனர். அன்னபூர்ணா குடும்பத்தினர் வாழையடி வாழையாக நிர்வாகத்தை சிறப்பாக பராமரித்து வருகின்றனர். உயர் தரமான உணவுகளை அளித்து நாடு முழுவதும் பெரும் மதிப்பை பெற்றுள்ளனர். அன்னபூர்ணா காப்பியின் சுவை வடஇந்தியர்கள் வரை பரவி, மக்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது. அவர்களின் பணிகள் மென்மேலும் உயிர வாழ்த்துகிறேன்' என்றார்.

### சுத்தமும் தரமும் சிறப்பு...



கிளாசிக் போலோ நிறுவன உரிமையாளர் சிவராம் கூறுகையில், 'இரண்டு தளங்கள் மற்றும் பார்ட்டி ஹால் கொண்ட அவினாசி அன்னபூர்ணா கிளையின் சூழல் அற்புதமாக உள்ளது. அவர்களின் சமையலறையைப் பார்வையிட்ட போது மிகவும் தூய்மையாக, தரத்துடன் பாதுகாக்கின்றனர். பொருள்களை தரத்துடன் சுத்தமாக வைத்துள்ளனர். ஒவ்வொரு மணி நேரத்திற்கும் உணவுகளை சோதனை செய்வது அன்னபூர்ணா உணவகத்தின் மற்றுமொரு சிறப்பாகும்.

உலகம் முழுவதும் சுற்றியதில் இத்தகைய செயலை எங்கும் பார்த்ததில்லை. இத்தகைய உயர் தரமான உணவை வாடிக்கையாளர் நிறைவிற்காக வழங்கும் அன்னபூர்ணாவின் குடும்பங்களுக்கு வாழ்த்துகள்' என்றார்.

### தீவிர ரசிகன்!



ஹரிபவனம் ஹோட்டலின் நிர்வாக இயக்குநர் பாலச்சந்தர் கூறுகையில், 'கோயமுத்தூர் மாவட்ட ஓட்டல் சங்கத்தில் இருப்பதால் நாங்கள் அனைவரும் நண்பர்கள். இருப்பினும் அன்னபூர்ணா ஹோட்டலுக்கு நான் தீவிர ரசிகன். அனைத்து அன்னபூர்ணா திறப்பு நிகச்சியில் தவறாமல் கலந்துகொள்வேன். இத்தகைய சுவையான உணவை அன்னபூர்ணாவில் உண்பது எனது வழக்கமாகும். இதனை கோயமுத்தூரின் பெருமை என்று பெருமிதப்படுத்துவதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் இவர்கள் அதிக கிளைகளைத் திறந்து மக்களுக்கு மனதார சேவை செய்வதைத் தொடர வேண்டும்' என்றார்.

## அரசு பள்ளி மாணவிகளுக்கான இலவச இரத்தசோகை பரிசோதனை முகாம்

தி கோவை மெயில்

மக்கள் சேவை மையம், பி.எஸ்.ஜி. மருத்துவமனை, உலக மலையாளிகள் சபை மற்றும் இதயங்கள் அறக்கட்டளை இணைந்து, துளிர் திட்டத்தின்கீழ் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள அரசுப் பள்ளி மாணவிகளுக்காக நடத்திய இலவச இரத்த சோகை, சர்க்கரை அளவு பரிசோதனை முகாம் கோயமுத்தூர் ராம்நகர் ரங்கநாதபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

பாஜக தேசிய மகளிரணித் தலைவியும், கோயமுத்தூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் தலைமை தாங்கினார். அறக்கட்டளை நிறுவனர் கிருஷ்ணன் சுவாமிநாதன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக எஸ்.என். ஆர். குழும முதன்மை இயக்கு அலுவலர் சுவாதி ரோஹித், ராசி சிட்ஸின் நிறுவனர் ராமசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மருதமலை கோவிலில் அறங்காவலர் குழு பதவியேற்பு

தி கோவை மெயில்

கோவை, மருதமலையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு ஜெயக்குமார், மகேஷ்குமார், பிரேம்குமார், சொக்கம்புதூர் கனகராஜ், சுகன்யா கனகரத்தினம் ஆகிய 5 பேர் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் வெள்ளிகிழமை மருதமலை முருகன் கோவில் அலுவலகத்தில் அறங்காவலர்களாக பொறுப்பேற்று கொண்டனர்.

அதனை தொடர்ந்து, அறங்காவலர் குழு தலைவருக்கான தேர்தலை கோவை மண்டல இணை ஆணையர் ரமேஷ் நடத்தினார். இதில் அறங்காவலர் குழு தலைவராக ஜெயக்குமார் அனைவராலும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவருக்கு கோவை மண்டல உதவி ஆணையர் கருணாநிதி பதவி பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து அறங்காவலர் குழு உறுப்பினர்களாக மகேஷ்குமார், பிரேம்குமார், சொக்கம்புதூர் கனகராஜ், சுகன்யா ராசரத்தினம் ஆகியோர் பொறுப்பேற்று கொண்டனர்.

விழாவில் தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் முருகேசன், ரவி மற்றும் முன்னாள் எம்.எல்.ஏ., கந்தசாமி, கோவை மண்டல இணை ஆணையர் ரமேஷ், மருதமலை சுப்பிரமணியசுவாமி கோவில் துணை ஆணையர் ஹர்ஷினி, கோவில் கண்காணிப்பாளர், செல்வபுரம் ஆனந்த், பேரூர் மயில், காமராஜ்துல்லா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

புதிதாக பொறுப்பேற்று கொண்ட அறங்காவலர் குழு தலைவர், அறங்காவலர் குழு உறுப்பினர்களுக்கு தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் ரவி, முருகேசன் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.

## நேஷனல் மாடல் பள்ளியில் மாணவத் தலைவர் பதவி ஏற்பு விழா

தி கோவை மெயில்

நேஷனல் மாடல் சீனியர் செகண்டரி பள்ளியில் மாணவர் சங்கத் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. இதில் ஸ்கியர்ஸ், மரைனர்ஸ், ஸ்பிரிண்டர்ஸ் மற்றும் பிளையர்ஸ் என நான்கு குழுக்களை கொண்ட மாணவ மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்துக் கொண்டனர்.

அதேநாளில் நேரடி ஓட்டு எண்ணிக்கை நடத்தி மாணவர்களால் தேர்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அறிவித்தனர். மேலும் பள்ளி மாணவத் தலைவர், பள்ளி விளையாட்டுத் தலைவர் போன்ற பதவிகளுக்கு 68 மாணவ, மாணவியர்கள் போட்டியிட்டனர்.

### சிறு குறு நூற்பாலைகள் உற்பத்தி நிறுத்தம்

# பரிதாபத்தில் உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள்

## நடவடிக்கை எடுக்குமா அரசு?

தி கோவை மெயில்

கோயமுத்தூரில் குறு, சிறு மற்றும் நடுத்தர நூற்பாலைகள் சங்கங்களின் அவசர ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளின் அதிபர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் சனிக்கிழமையிலிருந்து நூலின் உற்பத்தியும் நூலின் விற்பனையும் நிறுத்தம் செய்வதாக சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். இதுகுறித்து சிஸ்யா கௌரவ செயலாளர் ஜெகதீஷ் சந்திரன் மற்றும் இஸ்மா தலைவர் சுப்ரமணியம் கூறியதாவது,

'தமிழகத்தில் நூற்பாலைகள் பல மாதங்களாக வரலாறு காணாத நஷ்டத்தை சந்தித்து வருகிறது. கடந்த 20 வருடங்களில் முதன்முறையாக நூல் மற்றும் துணி வகைகளின் ஏற்றுமதி சுமார் 28% அளவு குறைந்துள்ளது. நூல் மற்றும் துணி உற்பத்தி செய்யப் பயன்படும் பஞ்சு, 40 ஆம் நம்பர் நூல், சுத்தமான பருத்தி போன்றவற்றின் விலை அதிகமாக உள்ளது. பஞ்சிலிருந்து 2,500 கிலோ நூல் தயாரிக்க ரூ. 1,00,000 வரை நஷ்டம் ஏற்படுகிறது.

பஞ்சின் மீது விதிக்கப்பட்ட 11% இறக்குமதி வரியால் உள்நாட்டு பஞ்சு நிலை 15 சதவீதம் உயர்ந்துள்ளது. வங்கிகளின் வட்டி விகிதமும் 11 சதவீதமாக உயர்ந்ததால் நூல் உற்பத்தி செலவு கிலோவுக்கு ஆறு ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மேலும் மின்சாரக் கட்டணம் உயர்வு, வருடாந்திர மின் கட்டண உயர்வு, பீக்ஹவரின் நேரம் மற்றும் மின் கட்டண உயர்வால் நூற்பாலைகளின் உற்பத்திச் செலவு கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை உயர்ந்துள்ளது.



பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் பங்கேற்ற உற்பத்தியாளர்கள் சங்கத்தினர்.

அண்டை நாடுகளின் நூல் மட்டும் துணி வகைகளின் இறக்குமதியால் உள்நாட்டு ஒட்டுமொத்த ஜவுளி சங்கிலித் தொடர் பாதிப்படைகிறது.

நூற்பாலைகள் சரிவர இயங்கவில்லை என்றால் இந்தியாவின் முதுகெலும்பான ஜவுளித் தொழில்களுக்கு மிகப்பெரிய பாதிப்பு உண்டாகும். எனவே மத்திய, மாநில அரசுகள் இந்த அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக போர்க்கால அடிப்படையில் பின்வரும் எங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

**மத்திய அரசுக்கான கோரிக்கைகள்:**

பஞ்சின் மீது 11% இறக்குமதி வரியை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்.

வங்கிக் கடன் வட்டி விகிதம் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும்.

ECLGS கடனை மறுசீரமைத்து ஆறு மாத விடுமுறை காலமாகவும், திரும்பச் செலுத்தும் காலம் 7 வருடமாகவும் மாற்றி, குறைந்த வட்டியில் புதிய கடனாக வழங்க வேண்டும்.

இந்திய ரிசர்வ் வங்கி காலக் கடனின் அவகாசத்தை நீட்டிக்க வேண்டும்.

ஜவுளி நூற்புத் தொழிலுக்கு ஒரே நாடு ஒரே கொள்கையை கொண்டு வர வேண்டும்.

**மாநில அரசுக்கான கோரிக்கைகள்:**

தாழ்வழுத்த மின் நுகர்வோர்களுக்கும் உயர் அழுத்த மின் நுகர்வோர்களுக்கும் உயர்த்திய மின்சாரக் கட்டணத்தை தமிழ்நாடு அரசு உடனடியாகத் திரும்ப பெற வேண்டும்.

வருடாந்திர மின்கட்டண உயர்வை இரத்து செய்ய வேண்டும்.

பீக்ஹவரை மாலை 6 மணியிலிருந்து 10 மணி வரை மாற்ற வேண்டும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அதிகபட்ச தேவை கட்டணம் 90% ஆக வசூலிக்கிறது. பயன்பாட்டிற்கு ஏற்ப அதிகபட்ச தேவை கட்டணத்தை பதிவு செய்யப்பட்ட தேவை கட்டணமாக மாற்ற வேண்டும்.

மேலும் மேற்கூரை சூரிய மின்சாரம் உற்பத்தி செய்யும் தாழ்வழுத்த மின் நுகர்வோர்களுக்கும் உயர் அழுத்த மின் நுகர்வோர்களுக்கும் விதிக்கும் பிணைய கட்டணத்தை இரத்து செய்ய வேண்டும்.

நூற்பாலைத் தொழில் 24 மணி நேரமும் மின்சாரம் நுகரப்படும் தொழில் என்பதால், மத்திய மற்றும் மாநில அரசு, பசுமை எரிசக்தியை ஊக்குவித்து, மூலதன மானியமாக 15% வழங்க வேண்டும்.

## மக்களுக்காக உழைக்கும் ஜீன் தான் திமுக வின் ஜீன்

### நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நா.கார்த்திக் பேச்சு

தி கோவை மெயில்

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் கோவை மாநகர, மாவட்ட செயலாளருமான கார்த்திக் தலைமையில் 5,000 பேருக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா கோவை தெற்கு சட்ட பேரவைக்கு உட்பட்ட, பெரிய கடைவீதி பகுதி சார்பில் புதன்கிழமை ராஜா வீதி, தேர் நிலை திடலில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், திமுகவின் கோவை மாநகர, மாவட்ட தலைவர்களும், உறுப்பினர்களும், 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்துகொண்டனர். தையல் இயந்திரம், மிக்ஸி, சலவைப்பெட்டி, சேலை போன்ற பல்வேறு பொருட்கள் வார்டு வாரியாக வழங்கப்பட்டது.

மாவட்ட செயலாளர் கார்த்திக் பேசுகையில், 'இதுபோன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்னும் தொடர்ந்து நடைபெற உள்ளது. கலைஞருடன் வாழ்ந்த நாட்களை வாழ்நாள் பாக்கியமாக கருதுகிறோம். கலைஞரை நாங்கள் என்றென்றும் போற்றி புகழுவோம்.

கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், திமுக வின் மீது வைத்த குற்றச்சாட்டிற்கு பதிலளித்து பேசுகையில், 'திமுக வை சார்ந்தவர்கள் மக்களின் அடிப்படை பிரச்சனையைத் தீர்க்க இல்லந்தோறும் சென்று உழைத்துக் கொண்டிருப்பவர்கள். திமுக தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை மக்களுக்காக உழைத்து தமிழகத்திற்கு உயிரோட்டமாக உள்ளது. மக்களுக்காக உழைக்கும் ஜீன் தான் திமுக வின் ஜீன்' என்று பதிலளித்தார்.



பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரத்தை வழங்குகிறார் மாநகர மாவட்ட செயலாளருமான நா.கார்த்திக்.

## கங்கா செவிலியர் கல்லூரியில் கலாச்சார போட்டி

தி கோவை மெயில்

கோவை வட்டமலை பாளையத்தில் உள்ள கங்கா செவிலியர் கல்லூரியில், தேசிய செவிலியர் சங்கத்தின் சார்பில் 30வது ஆண்டு மண்டல அளவிலான TNSNACOM (டாஸ்னாகாம்) கலை மற்றும் கலாசாரப் போட்டிகள் புதன்கிழமை நடைபெற்றன.

சிறப்பு விருந்தினர் கங்கா மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ராஜா சபாபதி, போட்டிகளை துவக்கிவைத்தார். 5வது மண்டல ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எஸ்தர் ஜான் தலைமையில் அனைத்து கல்லூரியின் துணைத் தலைவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

கங்கா மருத்துவமனை தலைவர் டாக்டர் சண்முகநாதன் தலைமை வகித்தார். கங்கா செவிலியர் கல்லூரி அறங்காவலர் ரமா ராஜசேகரன் வரவேற்றார். கங்கா மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் கனகவல்லி சண்முகநாதன் குத்துவிளக்கேற்றினார். தேசிய செவிலியர் சங்கத் தமிழ்நாடு கிளை 5வது மண்டலப் பொறுப்பாளர்கள் டாக்டர் ஜெயசுதா மற்றும் தேசிய துணைத் தலைவர் டாக்டர் ஜெய்னி கெம்ப் ஆகியோர் இம்மாநாட்டின் கருப்பொருளான "செவிலிய மாணவர்களின் மேம்பாட்டின் சவால்களின் தொகுப்பு" குறித்து விளக்கினர்.

தமிழ்நாடு மாநிலத் தலைவர் டாக்டர் ஆணி கிரெஸ் கலைமதி வழிகாட்டுதலில், தமிழ்நாடு செவிலிய மாணவ கழகத்தின் டாஸ்னாகாம் 30வது ஆண்டு மண்டலப் போட்டிகளை, கல்லூரி முதல்வர் ஏற்று நடத்தினார்.

இப்போட்டிகளில் கோவை, நீலகிரி மாவட்டத்திலுள்ள 35 செவிலியம் சார்ந்த கல்லூரிகள் மற்றும் பள்ளிகளிலிருந்து பதிவு செய்யப்பட்ட சுமார் 1,200 செவிலிய மாணவ மாணவிகள் சிகை அலங்காரம், காய்கறி செதுக்குதல், கோலமிடுதல், பேச்சு, நடனம், கட்டுரைப் போட்டி என 16 தனி மற்றும் குழுப் போட்டிகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.




நடன நிகழ்ச்சியில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவிகள்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலை. பட்டயப் படிப்பு விழா



மாணவ, மாணவிக்கு பட்டத்தினை வழங்குகிறார் சிறப்பு விருந்தினர் காமன்வெல்த் ஆஃப் லேர்னிங் இயக்குநர் ஷட்ரக், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கீதாலட்சுமி ஆகியோர்.

தி கோவை மெயில்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு சிறப்பாக இயங்கிவரும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம், உழவர்கள், மகளிர், இளைஞர், பள்ளிப்படிப்பைத் தொடர இயலாதவர்கள், சுயதொழில் முனைவோர், கிராமங்களில் சிறுதொழில் தொடங்குவதில் ஆர்வமுள்ளவர்கள் தங்களின் தொழில்நுட்ப அறிவையும், அனுபவங்களையும் வளர்க்கும் வண்ணம் பல சான்றிதழ் பாடங்கள், வேளாண் இடுபொருள் பட்டயப் படிப்பு மற்றும் இதர பட்டயப் படிப்புகளை நடத்தி வருகிறது.

2023 ஆம் ஆண்டிற்கான திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் பட்டயப் படிப்பு சான்றிதழ் வழங்கும் விழாவில், சிறப்பு விருந்தினராக கெனடா, காமன்வெல்த் ஆஃப் லேர்னிங் இயக்குநர் ஷட்ரக் பங்கேற்றார்.

தமிழ்நாடு வேளாண்மை இடுபொருள் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் மோகன், தமிழ்நாடு வேளாண்மை இடுபொருள் கூட்டமைப்பின் மாநில செயலாளர் சத்தியமூர்த்தி, பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் பாலசுப்ரமணி, ஆராய்ச்சி இயக்குநர் இரவீந்திரன் ஆகியோர் வாழ்த்தினர்.

தலைமையுரை ஆற்றிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் கீதாலட்சுமி, திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்கக பாடத்திட்டங்களின் முக்கியத்துவங்கள், வேலை வாய்ப்புகள் பற்றி எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் பட்டயப்படிப்பு பட்டங்களைப் பெற்ற 427 ஆண்கள், 81 பெண்கள் என 508 மாணவர்களுக்கு துணைவேந்தர், சிறப்பு விருந்தினர்கள் சான்றிதழ், விருதுகளை வழங்கி சிறப்பித்தனர்.

## தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணி

தி கோவை மெயில்


கோயமுத்தூரில் ஆதரவற்ற தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் தெரு நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாகவும், இதனைக் கட்டுப்படுத்த மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பல்வேறு பொதுமக்கள், வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் கோயமுத்தூர் மாநகராட்சி ஆணையாளர் பிரதாப் உத்தரவின்பேரில், நகராட்சியில் ஆதரவற்ற தெரு நாய்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் தடுப்பூசி செலுத்தும் பணிகள் துவங்கின. புதன்கிழமை சரவணம்பட்டி, கிருஷ்ணாபுரம், இளங்கோ நகர், புத்தர் நகர் மற்றும் அக்பர் நகர் போன்ற பகுதிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

# விபத்து, அவசர சிகிச்சையில் முன்னோடி

# கே.ஜி. மருத்துவமனை



**டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம்,**
**தலைவர், கே.ஜி. மருத்துவமனை**

✍ சுரேஷ், தி கோவை மெயில்

அவசரகால சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவருக்கு செய்ய வேண்டிய சிகிச்சைகள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கே.ஜி. மருத்துவமனை தலைவர் டாக்டர் ஜி.பக்தவத்சலம் கூறியதாவது,

'திடீரென ஒருவர் மயக்கம் அடைந்து நினைவும் நாடித்துடிப்பும் இல்லாத சூழலில் 108 க்கு அல்லது கே.ஜி. மருத்துவ அவசர ஊர்தி 0422 2222 222 க்கு அழைக்க வேண்டும். பக்கவாதம், மாரடைப்பு, விபத்து போன்ற அவசரமான சூழலில் ஒரு மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். இந்த அவசரகால சூழலை கோல்டன் ஹவர் என அழைக்கிறோம்.

அடுத்த நாள் செல்வோம், மருந்தகத்தில் மருந்து வாங்கிக்கொள்ளலாம், அருகிலுள்ள சிறிய மருத்துவமனைக்குச் செல்வோம் என முடிவெடுப்பது தவறு. நமது உடலில் ஏற்பட்டிருக்கும் பிரச்னை சிறியதா, பெரியதா, உயிருக்கு பாதிப்பா என தெரிந்துகொள்ள அனைத்து வசதிகளும் கொண்ட பெரிய மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டும். இம்மாதிரியான சூழலில் அரசின் பெரிய மருத்துவமனைக்கோ அல்லது கே.ஜி. மருத்துவமனை போன்ற அனைத்து வசதிகளும் கொண்ட பெரிய மருத்துவமனைக்கே செல்ல வேண்டும்.

கோல்டன் ஹவர் என்பது விபத்தோ, மாரடைப்போ, மூளை பக்கவாதமோ ஏற்பட்ட நேரத்திலிருந்து அடுத்த ஒரு மணி நேரம் ஆகும். அந்த நேரத்திற்குள் வியாதியைக் கண்டறிந்து சிகிச்சை ஆரம்பித்திருக்க வேண்டும்.

கோயம்புத்தூரில் புதிதாக குடிபெயர்ந்துள்ளீர்கள் என்றால் சிறந்த மருத்துவமனை எது என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அவசரகால கட்டத்தில் மருத்துவமனையைத் தேடுவது கடினமான ஒன்று.

இதுபோன்ற அவசரகாலச் சூழலுக்கு கே.ஜி. மருத்துவமனையில் கிருஷ்ணகுமார், செந்தில்குமார், அப்துல்காதர் என்ற மூன்று கிளினிக் மேனேஜர்கள் உள்ளனர். கிளினிக் மேனேஜர் என்பவர் மருத்துவரோ அல்லது செவிலியரோ கிடையாது. ஆனால் அவர்கள் வைத்தியம் செய்வதற்கான தகுதி உடையவர்கள். எங்களுடைய இந்த மூன்று கிளினிக் மேனேஜர்களுக்கும் 10 வருடம் அனுபவம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

முதல் ஒரு மணி நேரத்தில், நோயாளி வந்ததும் இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, ஆக்ஸிஜன் செறிவு, ஈ.சி.ஜி., இரத்தம் போன்றவை சோதனை செய்யப்படும். விபத்து ஏற்பட்டவருக்கு உடனே சிஜி ஸ்கேன் மார்புக்கும், மூளைக்கும், முதுகெலும்புக்கும் எடுக்கப்படும். நோயாளிக்கு எந்த இடத்தில் அடிபட்டது என அறிந்து உடனே சிகிச்சைகள் தொடங்கிவிடும். தலையில் அடிபட்டதற்கு சிகிச்சை அளிப்பதில் கே.ஜி. மருத்துவமனை சிறந்து விளங்குகிறது.

*"East or west K.G. is the Best"* கே.ஜி. மருத்துவமனையில் தலையில் அடிபட்டதற்கு சிகிச்சை அளிப்பவர்களுக்கு 45 வருடம் அனுபவம் உள்ளது. இதுவரை இங்கே சுமார் 1.5 லட்சம் பேருக்கு தலையில் அடிபட்டதற்காக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தலையில் அடிபட்டால் உடனே சிகிச்சை தொடங்க வேண்டும். சிகிச்சை செய்யும் ஒரு மணி நேரம் கோல்டன் ஹவர் ஆகும். அந்த ஒருமணிநேரத்தில் ஒவ்வொரு நிமிடமும் பிளாட்டினம் மினிட் ஆகும்.

> **இராணுவம் போன்று எந்நேரமும் எதற்கும் தயார் நிலையில் கே.ஜி. மருத்துவமனை.**

அதேபோல, மாரடைப்புக்கு கே.ஜி. மருத்துவமனையின் அவசர ஊர்தியிலேயே கிளினிக் மேனேஜரால் சிகிச்சை அளிக்கப்படும். அவசர ஊர்தியிலேயே சிறந்த மருத்துவம் கொடுக்கப்படும்.

பின்னர் மருத்துவமனைக்கு பாதிக்கப்பட்டவர் வந்த உடனே அடைப்பு ஏற்பட்ட இடத்தைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சையும் நடைபெறும். கே.ஜி. மருத்துவமனையில் மாரடைப்புக்கு சிகிச்சை செய்பவர்களுக்கு 30 வருடம் அனுபவம் உள்ளது. கே.ஜி. மருத்துவமனையில் 6 இருதய நோய் நிபுணர்களும் 5 இதய அறுவை சிகிச்சை நிபுணர்களும் உள்ளனர்.

கே.ஜி. மருத்துவமனையில் 24 மணி நேரமும் இரத்த வங்கியும் அவசர சிகிச்சைக்கு முன் எடுக்கப்படும் பரிசோதனைகளும் நடைபெரும். கே.ஜி. மருத்துவமனையில் 100 டாக்டர்கள், 100 தொழில்நுட்பநிபுணர்கள், 250 சிறந்த பயிற்சி பெற்ற செவிலியர்கள் உள்ளனர். இராணுவம் போன்று எந்தநேரமும் எதற்கும் தயார் நிலையில் கே.ஜி. மருத்துவமனையில் மருத்துவர்கள் தயாராக இருப்பார்கள். கே.ஜி. மருத்துவமனை சமுதாயத்திற்காக உருவாக்கப்பட்டது ஆகும்' என்றார்.

மேலும் தகவல்களுக்கு 0422 222 2222, 98422 66630.











## கோல்டன் ஹவரில் ஆம்புலன்ஸின் பணி

**- கிருஷ்ணகுமார், கிளினிக்கல் மேனேஜர்**



வீடு, அலுவலகம் என ஏதோ ஒரு இடத்தில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கும் உங்களில் ஒருவரை ஆம்புலன்ஸில் அழைத்துக்கொண்டு, மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் பாதுகாப்பாக சேர்ப்பது எனது முக்கியமான பணி.

ஒருவருக்கு திடீரென நெஞ்சு வலி, உடல் முழுக்க வியர்ப்பது போன்ற தொந்தரவுகள் வரும்போது, உடனடியாக அவருக்கு ஓய்வுகொடுப்பதுதான் நீங்கள் செய்ய வேண்டிய முதல் உதவி. நடப்பது, ஓடுவது, குனிந்து நிமிர்ந்து வேலை செய்வது போன்றவற்றை செய்யக்கூடாது. அமைதியாக அவரை ஓரிடத்தில் உட்கார வைக்க வேண்டும். இரண்டாவது, உடனடியாக ஆம்புலன்ஸை அழைப்பது.

மற்றொரு முக்கிய அனுபவக் குறிப்பு, நெஞ்சு வலி ஏற்பட்டவருக்கு கழிவறை செல்ல வேண்டும் என்று தோன்றினால், அவரிடம் கழிவறையின் உள்தாழ்ப்பாளைப் போட வேண்டாம் என எச்சரிக்க வேண்டும். ஏனெனில், உள்ளே அவர் மயங்கி விழுந்தால் கதவை உடைத்து அவரைக் காப்பாற்ற முனையும்போது, தேவையின்றி அவரின் உயிரைக் காப்பாற்றும் பொன்னான நேரம் வீணாகும். மேலும் சி.பி.ஆர் எனும் முதலுதவி குறித்து தெரிந்தால் அதனை செய்ய வேண்டும்.

ஆம்புலன்ஸில் வரும் நாங்கள், உடனடியாக ஹார்ட் அட்டாக் வந்தவருக்குத் தேவைப்பட்டால் இசிஜி எடுப்பது, மருந்து கொடுப்பது, ஆக்ஸிஜன் கொடுப்பது என உயிர் காக்கும் முதலுதவிகள் செய்வோம். பின்னர், அவரின் உடல்நிலை குறித்து மருத்துவமனைக்குத் தெரிவித்துவிடுவோம். உடனே அங்கு அவருக்குத் தேவையான அவசர சிகிச்சைப் பணிகள் துவங்கிவிடுவதால், நோயாளி மருத்துவமனை வந்தவுடன் உரிய சிகிச்சைகள் உடனே ஆரம்பிக்கும்.

இதன்மூலம் தேவையற்ற ஆபத்தான சூழ்நிலைகள் தவிர்க்கப்பட்டு, அவரது உயிர் காப்பாற்றப்படும். வரும் வழியிலேயே ஒருவேளை இருதயம் நின்றுவிட்டால் ஷாக் கொடுத்து மீண்டும் உயிர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளும் ஆம்புலன்ஸில் வரும் மருத்துவ உதவியாளர்கள் மூலம் செய்யப்பட்டு, அசம்பாவித சூழ்நிலைகளைத் தவிர்த்துவிடுவார்கள். இதுதான் கோல்டன் ஹவரில் ஆம்புலன்ஸில் பின்பற்றும் பணி.

## 'லெவல் 1 ட்ருமா சென்டர்' கே.ஜி.மருத்துவமனை

**- செந்தில்குமார், கிளினிக்கல் மேனேஜர்**



'விபத்து ஏற்பட்ட அடுத்த 10 நிமிடத்தில் பாதிக்கப்பட்டவரை மருத்துவனையில் சேர்ப்பதே எங்களுடைய முக்கியப் பணி. இதனை பிளாட்டினம் மினிட் என்று கூறுவர். அந்த குறிப்பிட்ட நேரத்திற்குள் விபத்து அல்லது அவசர சிகிச்சைப் பிரிவில் பாதிக்கப்பட்டவரை எவ்வளவு விரைவாக மருத்துவமனைக்குக் கொண்டு சேர்க்க முடியும் என்பதாகும்.

உயிர் போகும் தலைக் காயங்கள், உயிருக்கு ஆபத்து உண்டாக்கக்கூடிய முகம், தாடை, எலும்பு முறிவு, நுரையீரல் சேதம், இரத்தநாளங்கள் கிழிந்து அதிக இரத்தப்போக்கு, குறைந்த இரத்த அழுத்தம் ஆகியவை ஏற்பட்ட அந்த உயிரை கொல்லக்கூடிய நிலையில் பிளாட்டினம் மினிட் என்பதை நாங்கள் எங்கள் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவோம்.

ஆம்புலன்சில், எ.பி.சி.டி. அணுகுமுறையைப் பின்பற்றி முதலில் மூச்சு விடுவதில் ஆபத்து இருப்பவர்களுக்கு ஆக்ஸிஜன் கொடுக்கப்படும் (ஏர்வே), குறைந்த இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு கதீட்டர் *(Intravenous catheter)* செலுத்தி தேவையான இரத்தம் மற்றும் குளுக்கோஸ் கொடுக்கப்பட்டு முதன்மை கவனிப்பில் முதலுதவி செய்து, அவர்களை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்போம்.

கடந்த 45 ஆண்டுகளாக கே.ஜி. மருத்துவமனையில் ஆம்புலன்ஸ், இரத்த வங்கி, மருந்தகம், கதிரியக்கவியல் மற்றும் இமேஜிங், சிஜி ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே பிரிவு, ஆபரேஷன் தியேட்டர், கேத் லேப் எனப் பலதரப்பட்ட மருத்துவக் குழு, அவசர சிகிச்சை மருத்துவர்கள், தீவிர சிகிச்சை மருத்துவர்கள், பொது அறுவை சிகிச்சை நிபுணர் ஆகியோர் 24ஜ்7 மணி நேரமும் எங்கள் மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறார்கள். அதனாலேயே கே.ஜி.மருத்துவமனை 'லெவல் 1 ட்ருமா சென்டர்' என்று அழைக்கப்படுகிறது.

ஸ்கூப் மற்றும் ரன் என்பதைக் கவனத்தில்கொண்டு பிளாட்டினம் மினிட்களைப் பயன்படுத்தி, விபத்து ஏற்பட்ட பகுதியில் இருந்து விபத்திற்கு உ ள்ளானவர்களை விரைந்து அழைத்துச்செல்வோம். மேலும் ஆக்ஸிஜன் முகமூடி, எண்டோட்ராஷியல் குழாய்கள், இருதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், சுவாசம், கார்பன் அளவு போன்றவற்றைக் காட்டும் மல்டி பாரா மானிட்டர் முதலிய முதன்மை தேவைக்கான கருவிகளைக் கொண்ட ஆம்புலன்ஸ் எங்களது மருத்துவமனையில் உள்ளது.

**அவசர நிலையில் என்ன செய்ய வேண்டும்?**

விபத்திற்கு உ ள்ளானவர்களை முதலில் விபத்து ஏற்பட்ட பகுதியில் இருந்து பாதுகாப்பான, காற்றோட்டமான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். பிறகு, 108 ஆம்புலன்ஸ் சேவையை தொடர்புகொண்டு எந்த இடத்தில் இருக்கிறோம் என்ற சரியான தகவல்களை அளிக்க வேண்டும்.

மேலும், கே.ஜி. மருத்துவமனையின் அவசர சிகிச்சை மையத்தின் 0422 22 22 222 என்ற எண்ணைத் தொடர்புகொள்வதனால் 10 நிமிடத்திற்குள் விபத்து ஏற்பட்ட பகுதியை அடைய நாங்கள் முதன்மை தருகிறோம்' என்றார்.

## முதலுதவி சிகிச்சை மூலம் உயிர்களை காப்பாற்றலாம் - அப்துல் காதர், சுவாச சிகிச்சை நிபுணர் மற்றும் கிளினிக்கல் மேனேஜர்

பெரும்பாலும் மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள்தான் திடீரென உயிரிழக்கின்றனர். இதுபோன்ற பிரச்னைக்கு முக்கியமான காரணம், 'கார்டியாக் அரெஸ்ட்' (இருதய நிறுத்தம்). இந்த கார்டியாக் அரெஸ்ட் நிகழ்ந்தால் அந்த நபர் 4 நிமிடங்களில் உயிரிழக்க நேரிடும் என்கிறார் கே.ஜி. மருத்துவமனையின் சுவாச சிகிச்சை நிபுணரும் கிளினிக்கல் மேனேஜருமான வி.அப்துல் காதர்.

மேலும் அவர் கூறுகையில், 'உலகிலேயே இந்தியாவில்தான் அதிகளவு உயிரிழப்பு நமக்கு அறியாமல் வீட்டிலும் பொது இடங்களிலும் நடக்கிறது. ஒருவரின் உயிருக்கு ஆபத்தான நிலைமையில் கார்டியாக் அரெஸ்ட் ஏற்படும்போது அடுத்த 4 நிமிடங்கள்தான் கோல்டன் மினிட்ஸ். நாம் அனைவரும் எந்த ஒரு நபருக்கு சுயநினைவோ, இதயத்துடிப்போ அல்லது மூச்சு விடுதலோ நின்றால் அடுத்த 4 நிமிடங்களில் அவருக்கு முதலுதவி செய்ய வேண்டும்.

அந்த மாதிரியான சூழலில் முதலில் நாம் அவசர ஊர்தியை அழைக்க வேண்டும். பின்பு அந்த நோயாளி கார்டியாக் அரெஸ்ட் நிலையில்தான் உள்ளாரா என்று தெளிவுபடுத்தி, அவருக்கு நெஞ்சுப்பகுதியின் நடுவில் கைவைத்து விட்டுவிட்டு அழுத்தம் கொடுக்க வேண்டும். பின்பு மூச்சு இல்லாத பட்சத்தில் செயற்கையாக நமது மூச்சுக்காற்றை கொடுக்க வேண்டும். இதனால் தற்காலிகமாக மூளைச்சாவு ஏற்படாமல் தடுக்க முடியும்.



இதற்கு பிறகு அவசர ஊர்தியில் வரும் துணை மருத்துவர் அந்த நோயாளிக்கு சுவாசம் தேவைப்படுகிறதா, இருதயத் துடிப்பு தேவைப்படுகிறதா, இரத்த அழுத்தம் தேவைப்படுகிறதா என்பதை அறிந்து அதிர்ச்சி சிகிச்சை *(Shock Treatment)* அளிக்க வேண்டுமென்ற பட்சத்தில் அதனை செய்வார். இதோடு சேர்த்து அந்த நபருக்கு மாரடைப்பு வந்திருந்தால் அதற்கான சிகிச்சை, விலா எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால் அதற்கான சிகிச்சை போன்ற முதன்மையான சிகிச்சைகள் அவருக்கு அளிக்கப்படும். இவ்வாறு செய்தால்தான் அவருக்குத் திரும்ப சுவாசத்தைக் கொண்டுவர முடியும். மேலும் அவருக்கு அவசர ஊர்தியில் சிகிச்சையும் மருத்துவமனையில் தீவிர சிகிச்சையும் தேவைப்படலாம்.

கார்டியாக் அரெஸ்ட் மாரடைப்பிலேயே அதிகம் காணப்படுகிறது. ஒரு சிலருக்கு அறிகுறியோடும், ஒரு சிலருக்கு அறிகுறி வராமலேயே மாரடைப்பு வரும். சில சமயங்களில் மக்கள் காய்ச்சலை அலட்சியமாக விட்டுவிடுகின்றனர். ஆனால் அதுவே நிமோனியா காய்ச்சலாக இருந்து அவர்களுக்கு கார்டியாக் அரெஸ்ட்டை ஏற்படுத்திவிடுகிறது. தற்போது இந்த மாதிரியான சூழ்நிலைகளில்தான் கார்டியாக் அரெஸ்ட் அதிகமாக ஏற்படுகிறது.

மாரடைப்பு எந்த வயதிலும் வரலாம். அதனால் மாரடைப்புக்கான அறிகுறிகள் தென்பட்டால் அருகிலேயே ஈ.சி.ஜி. சோதனை செய்யும் இடங்களில் சென்று சோதனை செய்வது நல்லது. அது மாரடைப்புதான் என அறிந்த பிறகு இருதய சிறப்பு மருத்துவமனைக்கு அல்லது கே.ஜி. மருத்துவமனையைப் போன்று அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துமனைக்கு உடனே செல்ல வேண்டும்.

**கே.ஜி.பக்தவத்சலம் | கிருஷ்ணகுமார் | செந்தில்குமார் | அப்துல்காதர்**

## TNAU Organizes "Agri Hackathon"

✍ The Covai Mail

